# இந்தியத் துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

## உலக யோகா நாள் -21 ஜூன் 2020

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், வடக்கு மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி அன்று 6வது உலக யோக நாளை நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் மைதானத்தில் கொண்டாடியது.

பாரதப் பிரதமர் நரேந்திர மோதியின் செய்தி மற்றும் " ஸ்பிரிட் ஓப் யோகா " என்ற காணொளியுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்தியத் துணைத்தூதுவர் பாலச்சந்திரன் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரை ஆற்றினார்கள். யோகா பயிற்றுனர் சூரியகுமார் அவர்கள் யோகாசன பயிற்சிகளை வழிநடாத்த, கல்வி அமைச்சிலிருந்தும் மாணவர்களும் 100 க்கு மேற்பட்டோர்கள் சமூக இடைவெளியை கடைப்பிடித்து பங்கு பெற்றனர். உலக யோகா தினத்தை முன்னிட்டு, தூதரகத்தின் சார்பில் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இந்தியத் துணைத் தூதுவர், கல்வி அமைச்சின் செயலாளர் திரு இளங்கோவன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பரிசுகளை வழங்கினர்.

**கட்டுரைப் போட்டி**

முதலாவது பரிசு ரூபா.10, 000 செல்வி. அம்சாகினி சிவராசகுருக்கள் யாழ் புற்றளை மகா வித்யாலயம்

இரண்டாவது பரிசு ரூபா.7, 500 செல்வன். பரணிதரன் சானுஜன் யாழ் சரவணை நாகேஸ்வரி மகா வித்யாலயம்

மூன்றாவது பரிசு ரூபா.5, 000 செல்வன்.ஜே.ஜெப்றி ஜானுஜன் யாழ் புனித கென்றி அரசர் கல்லூரி

**ஓவியப் போட்டி**

முதலாவது பரிசு ரூபா.10, 000 செல்வன்.ஜெயதீபன் பிரணாப் யாழ் ஹாட்லி கல்லூரி

இரண்டாவது பரிசு ரூபா.7, 500 செல்வி.தர்மலிங்கம் அபிராமி யாழ் சண்டிலிப்பாய் இந்து கல்லூரி

மூன்றாவது பரிசு ரூபா.5, 000 செல்வி.ற.கிருஷாந்தி யாழ் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்யாலயம்

மேற்படி போட்டிகளில் கலந்து கொண்ட மீதமுள்ள 39 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ரூபா 1,000 பணப்பரிசாக வழங்கப்பட்டது.மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அவர்களுடைய நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

21 ஜூன் 2020<br>
யாழ்ப்பாணம்